பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**05 02 2026 THURSDAY 6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1)** பெண்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பு மக்களின் வளர்ச்சியை மத்திய அரசு உறுதி செய்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

**2)** கூட்டுறவுத்துறையின்கீழ் இயங்கும் பாரத் டாக்ஸி இணையதள செயலியை மத்திய அமைச்சர் திரு அமித் ஷா இன்று தொடங்கிவைத்தார்.

**3)** தமிழகத்தில் 34 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான 15 முதலீட்டுத் திட்டங்களுக்கு மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

**4)** மாநிலத்தில் போதைப்பொருள் புழக்கம் அதிகரித்துள்ளதாகவும், சட்டம் — ஒழுங்கு சீர்கெட்டுள்ளதாகவும் அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.

**5)** ஆசிய பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியா 2-ஆவது ஆட்டத்தில் ஜப்பானை வென்றது.

-- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>

நாட்டு நலன் மற்றும் ஏழை எளிய மக்களின் நலனுக்கான அம்சங்கள் குடியரசுத் தலைவர் உரையில் இடம்பெற்றுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இன்று குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேசிய பிரதமர், பெண்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பு மக்களுக்குமான வளர்ச்சியை மத்திய அரசு உறுதி செய்துள்ளதாக தெரிவித்தார்.

நாட்டின் வளர்ச்சியில் இளைஞர்களின் பங்கு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது என்று கூறிய அவர், வலிமைமிக்க நாடாக இந்தியா உருவெடுத்து வருவதாகவும் தெரிவித்தார்.

அறிவியல், விளையாட்டு என அனைத்துத் துறைகளிலும் இந்தியா தன்னம்பிக்கையுடன் முன்னேற்றப் பாதையில் செல்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் வளர்ச்சி குறித்து குடியரசுத் தலைவர் தமது உரையில் தெளிவாக எடுத்துரைத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

உலக பொருளாதாரத்தில் **11-**ஆவது இடத்தில் இருந்த இந்தியா, தற்போது மூன்றாவது இடத்திற்கு முன்னேறியிருப்பதாகவும் அவர் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

அனைவரின் பங்களிப்போடு அனைவருக்குமான வளர்ச்சி என்ற தாரக மந்திரத்தோடு நாடு வளர்ச்சி பெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

**2047-**ல் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை நோக்கி உறுதியுடன் நாம் முன்னேற வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

வரும் **25** ஆண்டுகள் நாட்டின் வளர்ச்சியில் மிக முக்கியமான ஆண்டுகள் என்றும் அவர் தெரிவித்தார்.

தம் மீதும், மத்திய அரசு மீதும் எதிர்க்கட்சிகள் எழுப்பும் குற்றச்சாட்டுகள் அனைத்திற்கும் தனித்தனியாக தாம் பதிலளிக்க தயாராக உள்ளதாகவும் பிரதமர் கூறினார்.

நாட்டின் வளர்ச்சியிலும், மக்கள் நலனிலும் எதிர்க்கட்சிகளுக்கு அக்கறை இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

மாநிலங்களவையில் பிரதமர் தமது பதிலுரையை தொடங்கியவுடன் காங்கிரஸ், திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.

<<<<<<>>>>>

கூட்டுறவுத்துறையின் கீழ் இயங்கும் பாரத் டாக்ஸி இணையதள செயலியை மத்திய உள்துறை மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று தொடங்கிவைத்தார்.

புதுதில்லியில், இந்த சேவையை தொடங்கிவைத்து பேசிய அவர், கூட்டுறவுத் துறையின் மூலம் இந்த திட்டம் செயல்படுத்தப்படும் என்று தெரிவித்தார்.

பாரத் டாக்ஸி திட்டத்தில் இணையும் டாக்ஸி ஓட்டுநர்கள் கமிஷன் உள்ளிட்ட எந்த பிடித்தமும் இன்றி அவர்களுக்கான டாக்ஸி வாடகையை பெறுவதற்கான வழி ஏற்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

டாக்ஸி பயணக் கட்டணத்திற்கு மேல் கூடுதலாக எந்தவொரு கட்டணமோ, கமிஷன் தொகையோ இல்லாத காரணத்தால் மக்களும் இத்திட்டத்தில் பயன்பெறுவர் என்றும் திரு அமித் ஷா தெரிவித்தார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் **34** ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான **15** முதலீட்டு திட்டங்களுக்கு மாநில அமைச்சரவை இன்று ஒப்புதல் அளித்துள்ளது.

முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்று நடைபெற்ற இக்கூட்டத்திற்குபின், மாநில தொழில்துறை அமைச்சர் திரு டி ஆர் பி ராஜா, செய்தியாளர்களிடம் பேசுகையில், இந்த திட்டங்கள் மூலம் **55** ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று தெரிவித்தார்.

மாநிலத்தின் பரவலான வளர்ச்சியை உறுதி செய்யும் வகையில், சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, நாமக்கல், பெரம்பலூர், திருச்சி, கரூர், திருப்பூர், ராமநாதபுரம், தூத்துக்குடி உள்ளிட்ட மாவட்டங்களில் இந்த திட்டங்கள் தொடங்கப்பட உள்ளதாக திரு டி ஆர் பி ராஜா கூறினார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் ஆயிரத்து **724** கோடி ரூபாய் மதிப்பிலான ஏழு கூட்டு குடிநீர் திட்டங்களை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.

இதுதொடர்பாக, மாநில அரசு இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் கூட்டு குடிநீர் திட்டம்

மற்றும் தூத்துக்குடி, திருவள்ளூர், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் உள்ள கூட்டு குடிநீர் திட்டங்களும் இதில் அடங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டங்கள் மூலம், 60 ஆயிரம் பேருக்கு பாதுகாப்பான குடிநீர் கிடைக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை, கோயம்புத்தூர், திருவள்ளூர் ஆகிய இடங்களில் பாதாள சாக்கடைகள் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களையும் அவர் திறந்து வைத்தார்.

தஞ்சாவூர், ஒசூர், நாமக்கல், கேத்தி, ஏரல், ஸ்ரீவைகுண்டம், உத்திரமேரூர், பாலக்காடு உள்ளிட்ட இடங்களில் உள்ள மாநராட்சி மற்றும் பேரூராட்சி பள்ளிகளில் புதிய வகுப்பறைகள், ஆய்வுக்கூடங்கள் ஆகியவற்றையும் முதலமைச்சர் திறந்துவைத்தார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் சட்டம் — ஒழுங்கு சீர்கெட்டுள்ளதாகவம், போதைப்பொருள் நடமாட்டம் அதிகரித்துள்ளதாகவும் அஇஅதிமுக குற்றம் சாட்டியுள்ளது.

சென்னையில் இன்று நடைபெற்ற அக்கட்சியின் மகளிர் அணி ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், ஏழை-

எளிய நடுத்தர மக்களை பாதிக்கும் வகையில் அத்தியாவசியப் பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

மாநில மக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் வகையில் திமுக அரசு செயல்பட்டு வருவதாகவும் அந்த தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முந்தைய தேர்தலின்போது அறிவித்த வாக்குறுதிகள் எதையும் திமுக நிறைவேற்றவில்லை என்றும் மற்றொரு தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

கோவை சங்கனூர் பகுதியில் பிஜேபி சார்பில் நடைபெற்ற மோடி முகாமில் அக்கட்சியின் தேசிய மகளிர் அணித் தலைவர் திருமதி வானதி சீனிவாசன் மற்றும் தேர்தல் பொறுப்பாளர் திரு சுதாகர் ரெட்டி ஆகியோர் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திருமதி வானதி சீனிவாசன், தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் ஒருங்கிணைந்து முதல் முறையாக இதுபோன்ற முகாம்கள் நடத்தப்படுவதாக தெரிவித்தார்.

மத்திய அரசின் காப்பீடு திட்டத்திற்கான பதிவு, மூத்த குடிமக்களுக்கு உடனடியாக காப்பீட்டு அட்டைகள் வழங்கும் பணி உள்ளிட்டவை நடத்தப்படுவதாக அவர் கூறினார்.

செல்வமகள் சேமிப்புத் திட்டத்தில் பயனாளிகளை இணைத்து அவர்களுக்கான முதல் தவணை இந்த முகாமிலேயே வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் திருமதி வானதி சீனிவாசன் தெரிவித்தார்.

<<<<<>>>>>

தென் தமிழக கடலோரப்பகுதிகள் மற்றும் டெல்டா மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் அடுத்த 24 மணிநேரத்தில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

***(Sound Byte — செந்தாமரை கண்ணன் — 56 Sec. )***

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

திருநெல்வேலி மாவட்டம் வடக்குப் பச்சையாறு நீர்த்தேக்கத்தில் இருந்து நாளை முதல் அடுத்த மாதம் 31-ஆம் தேதிவரை 54 நாட்களுக்கு தண்ணீர் திறந்துவிட மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

-------------------

தருமபுரி மாவட்டம் வாணியாறு நீர்த்தேக்கத்தில் இருந்து நாளை முதல் பத்து நாட்களுக்கு தண்ணீர் திறந்துவிடவும் மாநில அரசு உத்தரவிடப்பட்டுள்ளது.

---------

வேலூர் மாவட்டத்தில் யானைகள் மற்றும் வன விலங்குகள் குடியிருப்புப் பகுதிகளுக்குள் நுழைவதை தடுக்க வனத்துறை நடவடிக்கை எடுத்து வருவதாக ஆட்சியர் திருமதி சுப்புலட்சுமி தெரிவித்துள்ளார்.

-----------------

நெல்லையில் வரும் 12-ஆம் தேதி புத்தக திருவிழா நடைபெறவுள்ளதையொட்டி, அதுகுறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை ஆட்சியர் திரு சுகுமார் தொடங்கிவைத்தார்.

----------------

கடலூர் மாவட்டத்தில், கட்டுமானத் தொழிலாளர் நலவாரியத்தில் பதிவு செய்த தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு வழங்கப்பட உள்ள திறன் மேம்பாட்டு பயிற்சி வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்

என ஆட்சியர் திரு சிபி ஆதித்ய செந்தில்குமார் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் இந்தியா 2-1 என்ற ஆட்டக்கணக்கில் ஜப்பானை வென்றது.

சீனாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் பிரிவு இரண்டாவது ஆட்டத்தில் இந்தியா இந்த வெற்றியை பெற்றது.

------------------------

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற உள்ள இறுதி ஆட்டத்தில் தில்லி அணி - பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

வதோதராவில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.

<<<<<<END>>>>>